For Private Circulation Only

நவம்பர் 2012 மலர் 5 இதழ் 6

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY







# மாஸ்டரின் அறிக்கை

செயற்குழுவின் சிறப்புக் கூட்டம் ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்று முடிந்தவுடன், மாஸ்டர் பொறுப்பிலிருந்து விடுபட்டதை போல் காணப்பட்டார். ஆனால், எப்பொழுதும் போல விழிப்புடனே இருந்தார். ஆகஸ்ட் 16 அன்று காலையில், காட்டேஜில் இருந்த அனைத்து அப்யாசிகளிடமும், தங்க புத்தகத்தில் கையெழுத்திட்டார்களா என கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டார். கையெழுத்திட வசதியாக, அவர் தன்னார்வ தொண்டர் பொறுப்பாளரை காட்டேஜிற்கு வரசொல்லி அழைப்புவிடுத்தார். சுற்றியிருந்த அப்யாசிகளை மென்மையாகக் கண்டித்தார். அந்த நிகழ்வானது, சிறிய வேலையாக இருந்தாலும் கூட, அந்த செயலை முடிப்பதற்காக அவருக்கிருந்த பொறுப்பை காட்டியது.

மாஸ்டரின் உடல்நிலை இன்னமும் திருப்திகரமாக இல்லாமல் இருந்ததால், அவர் எளிமையான தினசரி வழக்கங்களைக் கையாண்டு வருகிறார். காலையில் தினமும் வருகை புரியும் இயன்முறை (physiotherapist) மருத்துவருடன் பயிற்சி செய்கிறார். இயன்முறை சிகிச்சைக்குப் பிறகு, பொதுவாக அவர் சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார். அவர் தன்னுடைய வழக்கமான வேலைகளான காலை உணவு உண்ணுதல் மற்றும் செய்திகள் வாசிக்கப்படுவதைக் கேட்டல் ஆகியவற்றை முயற்சி செய்கிறார். பின்னர், தன்னுடைய நேரத்தை மின்னஞ்சலை பார்ப்பதற்காகவும், தன்னுடைய வேலைகளை செய்வதற்காகவும் செலவழிக்கிறார். மாலையில் இன்னொரு இயன்முறை மருத்துவ சிகிச்சை இருக்கிறது. பல தருணங்களில், மாஸ்டர், சிறிது தூரம் நடந்துவிட்டு, பின் சக்கர நாற்காலியில் அமர்ந்து ஒரு சுற்று வருவதும் அல்லது வெளியே வந்து அப்யாசிகளுடன் அமர்வதும் உண்டு. ஆரம்ப நாட்களில், அவர் நடப்பதற்கு உதவும் கருவியை (walker) பயன்படுத்தி வந்தார். பின்னர், அவர் கைத்தடியை பயன்படுத்தி, சிறிது தூரம் நடக்க முயற்சி செய்து வருகிறார். இந்த அனைத்து விஷயங்களும், மாஸ்டர் தன்னுடைய உடல்நிலையில் மெதுவாகவும், நிலையாகவும் முன்னேறி வருவதைக் காட்டுகிறது.

ஒரு சமயம் மாஸ்டர் ஒளிஉலகிலிருந்து வரும் மென்குரல்களின் ஒரு செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தார். அது நம்மிடையே, நமக்குள் இருக்க வேண்டிய ஒற்றுமையை வலியுறுத்தியது. மாஸ்டரும், நாமனைவரும் நம்முடைய சத்சங்கங்களில் ஒற்றுமையாக இருக்க வேண்டிய தேவையையும், ஒத்திசைவை நிலைநிறுத்த வேண்டியதையும் வலியுறுத்திவருகிறார்.

ஆகஸ்ட் 20மற்றும் 21-ந் தேதிகளில், மாஸ்டருக்கு சிறப்பு மருத்துவ பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் விளைவுப்பயன் நேர்மறையாக இருந்தது.

ஒருநாள் மதியம், மாஸ்டர் திடீரென, பல வருடங்களுக்கு முன்பு அவர் பார்த்த ஒரு திரைப்படத்தை நினைவு கூர்ந்தார். அது, ஐரோப்பாவின் திரையரங்குகளில் அவர் பார்த்திருந்த இரண்டு திரைப்படங்களில் ஒன்றாகும். இந்த திரைப்படத்தை அவர் பாரீசில் பார்த்திருந்தார். அதே நாளில்தான் அவர் 'சோர்போன் பல்கலைகழகத்தில்' சகஜமார்க்கம் பற்றிய உரையை வழங்கினார். அந்த திரைப்படத்தின் பெயர் "மனிகா: தி கேர்ள் ஹூ லிவ்டு ட்வைஸ்". அது மறுபிறவியைப் பற்றிய கதையை கொண்டது. அதை மாஸ்டர் முழுமையான ஈடுபாட்டுடன் பார்த்திருந்தார்.

ஆகஸ்ட் 26, ஞாயிறன்று காலை 11 மணியளவில், மாஸ்டர் ஆசிரமம் முழுவதும் 45 நிமிடங்கள் சுற்றி வந்தார். அப்பொழுது அவர் "நான் சிறையில் அடைத்து வைக்கப்பட்டதாக உணர்ந்தேன். இப்பொழுது நான் வெளியே வந்துவிட்டேன்" என்று கூறினார். அவர் சிற்றுண்டிச்சாலை, சமையலறைக்கூடத்தைச் சுற்றி வந்து, உடற்பயிற்சி இயந்திரங்களை பார்ப்பதற்காக, நூலகத்தொகுதியின் அடித்தளத்திற்கும் சென்றார். பின்னர் அவர் தியானகூடத்திற்கு வந்து சகோ. ஜேக்கியுடன் தியானகூடம் புதுப்பித்தல் தொடர்பாக கலந்துரையாடினார். காட்டேஜ் வராந்தாவில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு, நான்கு மாத இடைவெளிக்குப் பின், உணவருந்தும் அறையில் உணவருந்த அவர் முடிவு செய்தார்.

ஒருநாள் இயன்முறை சிகிச்சை முடிந்த பிறகு, மாஸ்டர் மருத்துவர்களிடம், மொழிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர், "இதை நான் முன்பே கூறியிருக்கிறேன், ஒரு மனிதனுடைய இதயத்திற்கான வழி, அவன் வயிற்றின் மூலமாக இல்லை, அவனது நாக்கு மூலமாகத்தான் இருக்கிறது.அவரது மொழியில் நமக்கு சில வார்த்தைகளே தெரிந்திருந்தாலும், அதை அவருடைய மொழியில் கூறினால், அது அவருடைய இதயத்தைத் தொடும்,"என்றார். மாஸ்டர் சில வாக்கியங்களை அரபி மொழியில் பேசிய பொழுது, அனைவரும் மிகவும் ஆச்சரியமடைந்தனர். இயன்முறை சிகிச்சைக்குப் பிறகு அவர் மிகவும் களைப்படைந்து,"உங்களில் யாராவது ஒருவர், என்னை ஒருசில அடிகள் கூட நடக்க சொன்னால், நான் ஓய்வடைந்து விடுவேன்!" என்றார்.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்







ஆகஸ்ட் 29 புதன்கிழமை அன்று மாஸ்டர் தனது இருதயப் பகுதியில் 24 மணி நேர பரிசோதனை ஒன்றை துவங்கினார். அவருடைய மார்புப் பகுதியில் பரிசோதனைக்குரிய கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவருடைய அன்றாட செயல்பாடுகளைச் செய்யும்படி அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன்படி மாலையில் தனது சக்கர நாற்காலியில் ஒரு சுற்று செல்வதற்கு முடிவு செய்திருந்தார். ஆனால் மழைத்தூறல் விழத்தொடங்கியதால், அவர் திரும்பி வந்து வராந்தாவில் அமர்ந்தார். வாமன அவதாரம் மற்றும் சுக்ராச்சாரியாரின் கதைகளையும், அந்த சம்பவத்தில், சுக்ராச்சாரியார் எவ்வாறு தனது கண்களை இழந்தார், என்பதையும் நினைவு கூர்ந்தார். அவர் தனக்கு முன்னால் அமர்ந்திருந்தவர்களிடம், அவர்கள் அனைவரும் கணிணி வல்லுனர்கள், ஆனால் கடந்த காலத்தினுடைய இந்த கதைகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது என்று அவர்களைப் பற்றி வேடிக்கையாகப் பேசினார்.

சகோதரி. அல்லா அவர்களும், சகோ. இகர் அவர்களும் "தி கோல்டன் சைலன்ஸ் ஆப் சத்கோல்" என்ற, சத்கோலைப் பற்றிய ஒளி, ஒலி வடிவிலான விளக்கப்படம்(DVD) ஒன்றினைத் தயாரித்திருந்தனர். அதனை மாஸ்டரிடம் கொடுத்து, அதனை அவர் காண வேண்டும் என்ற தங்களுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தினர். மாஸ்டரும் மிகுந்த ஆர்வத்துடன் அதனைப் பார்த்தார். ஒவ்வொருவரும் சத்கோல் ஆசிரமத்திற்கே சென்றது போல, அந்த சூழ்நிலையே முற்றிலுமாக மாறிப் போனது.

செப்டம்பர் 11, புதன்கிழமை அன்று "காயத்ரி" யின் கட்டுமானப் பணிகள் துவங்கியதிலிருந்து, இது 50-வது வருடம். இதற்கு ஒரு விழா எடுக்க திட்டமிட்டிருந்ததாகவும், தனது உடல்நிலை காரணமாக அதனை நடத்த முடியாமல் போய்விட்டது எனவும் மாஸ்டர் கூறினார். ஒரு உரையாடலில், "ஒரு மனைவியின் தனிச்சிறப்புமிக்க பண்புநலன்களாவன: அவள் அன்பாக இருக்க வேண்டும், எப்படி சமைப்பது என்று அவளுக்கு தெரிந்திருக்க வேண்டும், குழந்தைகளை முறையாகக் கவனித்துக்கொள்ள அவளால் முடிய வேண்டும். தற்காலத்தில், நாம் அழகான மனைவி வேண்டும் என்று விரும்புகிறோம். அதன்பிறகு மற்றவர்கள் அவர்களைப் பார்க்கிறார்கள் என்று நாம் பொறாமைப்படுகிறோம்" என்பதை மாஸ்டர் அவதானித்தார்.

ஒரு அப்யாசி மாஸ்டரிடம், "அப்யாசிகளைச் சந்தித்தல் மற்றும் அதற்கிடையில் உங்களின் தேவைக்கேற்ப ஓய்வெடுத்தல் இவ்விரண்டையும் நீங்கள் எவ்வாறு சமமாக நிர்வகிக்கிறீர்கள்?" என்று கேட்டார். மாஸ்டர், "எனது வேலையை நான் நேசிக்கிறேன். எங்கு அன்பு உள்ளதோ, அங்கு எல்லைகள் எதுவும் இருப்பதில்லை" என்று கூறினார். அதன்பிறகு மாஸ்டர் கன்ஹா செயல்திட்டக் குழுவினரிடம் உரையாடினார். ஏப்ரல் 30, 2013 அன்று வர இருக்கும் விழாவிற்காக, கன்ஹா இடத்தை தயார்படுத்துவதற்கு பல்வேறு ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்கினார்.

பின்னர் மாஸ்டர், தியான மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலைகளை ஆய்வு செய்வதற்கு அங்கு சென்றார். தியான மண்டபத்திற்குச் சென்று திரும்பும் வழியில், DORM 'A' யில், விசாகப்பட்டினத்தில் இருந்து வந்திருந்த அப்யாசிகளிடத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த சகோ. ராகவன் அவர்களின் பேச்சைக் கேட்டு அங்கு சென்றார். பிறகு மாஸ்டர் அவர்களுக்கு 15 நிமிடங்கள் சிட்டிங் கொடுத்த பின்னர் காட்டேஜிற்குத் திரும்பினார்.

காட்டேஜில் கட்டுமானப் பணிகள் நடைபெற வேண்டியதன் பொருட்டு மாஸ்டர், சகோ. மாதவ ரெட்டி அவர்களுடைய வீட்டில் தங்குவதற்கு தீர்மானித்திருந்தார். சகோ. மாதவ ரெட்டி அவர்களுடைய வீட்டில் அவர் தங்குவது, முக்கியமாக, ஓய்வெடுக்கவும், ஆரோக்கியமான உடல்நலனைத் திரும்பப் பெறுவதற்கும் தான். அப்படி இருந்தும், அங்கும் தொடர்ச்சியாக அப்யாசிகள் அவரைச் சந்திப்பதற்காக வருகை புரிந்து கொண்டிருக்கின்றனர். மாஸ்டரும் தன்னால் இயன்ற அளவு அப்யாசிகளைச் சந்திக்க முயன்று வருகிறார். ஆனால், அவர் ஓய்வெடுத்தால் தான், அவரது உடல்நிலையில் நல்லதொரு முன்னேற்றத்தைத் திரும்பப் பெற முடியும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

ஒரு மாலைப்பொழுதில், மாஸ்டர், தன் படுக்கை அறையிலிருந்து ஊன்றுகோலின் உதவியுடன் நடந்து வந்தார். அது மாஸ்டரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் இருந்ததைக் காட்டியது. மாஸ்டர் சிறிது நேரம் வெளியில் அமர்ந்திருந்தார். பிறகு தனது சக்கர நாற்காலியை தானே இயக்கிக்கொண்டு உள்ளே சென்றார். வலி, துன்பப்படுதல் பற்றியும்,நமது உயர்வுக்கும், பரிணாம வளர்ச்சிக்கும் நன்மை










தரக்கூடிய வலியை எவ்வாறு ஒருவர் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது பற்றியும் அவர் உற்சாகமான மனநிலையில் பேசினார். அடுத்து வரக்கூடிய துன்பத்தை எதிர்கொண்டு, அதனைக் கடந்தே ஆக வேண்டும் என்பதற்காகத் தான், அவர் ஊன்றுகோலுடன் நடப்பதாக மாஸ்டர் கூறினார்.

செப்டம்பர் 22, சனிக்கிழமை காலை, மாஸ்டர் பல் பரிசோதனை செய்து கொண்டார். அதற்குப் பிறகு, முற்பகல் சுமார் 11.30 மணியளவில் DORM'A'க்குச் சென்றார்.

கடற்கரையோர ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து வந்திருந்த அப்யாசிகளை அவர் சந்தித்தார். காலத்தை வீணாக்காமல் இருக்கவேண்டியதன் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்து ஒரு சிறிய உரையாற்றினார். அதன்பிறகு சிறிது நேரம் சிட்டிங் அளிப்பதாகத் கூறினார்.மாஸ்டர் தன்னுடைய உரையில், "நமக்கு கிடைத்திருக்கும் நேரத்தை பயன்படுத்திக்கொண்டு முன்னேற வேண்டியதன் அவசரத்தைப்" பற்றி குறிப்பிட்டார். அவர், "வீணடிக்கப்பட்ட நேரத்தை திரும்பப் பெற முடியாது" என்பதை நினைவுகூருமாறு அனைவரையும் வலியுறுத்தினார்.

சில சமயங்களில், மாஸ்டர் தனது கைத்தடியின் உதவியுடன் முகப்பறை வரை வெளியே நடந்து வருவதுண்டு. அப்போது அப்யாசிகள் அவரைச் சுற்றி அமர்ந்துகொள்வர். அத்தகையதொரு தருணத்தின்போது, பல அப்யாசிகள் வந்து அவரைச் சுற்றி அமர்ந்துகொண்டனர். மாஸ்டர் மிகவும் களைப்புடனும் பலவீனமாகவும் காணப்பட்டபோதிலும், அதனைப் பொருட்படுத்தாமல் ஒரு சிட்டிங் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். சுமார் 15 நிமிடங்களுக்கு பிறகு "தட்ஸ் ஆல்" என்றார். பின்னர், துருக்கியிலிருந்து வந்திருந்த ஓர் அப்யாசி தம்பதியினர், அங்கிருக்கும் நமது மிஷனைப்பற்றி கொண்டுவந்திருந்த நற்செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தார். அது அவரை பூரிப்படையச் செய்தது.

ஒரு ஞாயிறன்று காலை, ஆசிரமத்தில் சத்சங்கம் நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில், சகோ. மாதவாவின் வீட்டில் மாஸ்டர் ஒரு சிட்டிங் கொடுத்தார். பின்னர், சகோ. கம்லேஷ் மாஸ்டரிடம், சத்சங்கத்தின் நடுவே, அது வேறொரு உள்ளீர்ப்பு மட்டத்திற்கு சென்றதாகக் கூறியபோது, அதற்கு மாஸ்டர், தான் சத்சங்கம் கொடுத்துக்கொண்டிருக்கையில், நடுவே ஏதோவொரு சமயத்தில் அனைவரையும் அதில் சேர்த்துக்கொண்டதாகவும், அதன் விளைவுதான் அது என்றும் கூறினார்.




செப்டம்பர் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை சகோ. கம்லேஷ் அவர்களின் பிறந்தநாளன்று, காலையில் மாஸ்டர் பிரசாதம் அளிக்க முன்வந்து அனைவருக்கும் கொடுத்தார். மாலையில், கொல்கத்தா அப்யாசிகள் அனைவரும் சகோ. மாதவாவின் வீட்டிற்கு வெளியே ஒன்றுகூடினர். அப்போது மாஸ்டர் வெளியே வந்து சில நிமிடங்கள் அமர்ந்தார். மாஸ்டரை சந்திக்க இயன்றதால், கூடியிருந்த அனைத்து அப்யாசிகளும் ஒரு மனநிறைவை உணர்ந்தனர்.

சீனக் கருத்தரங்கத்தின் துவக்கத்தில், அதன் ஏற்பாட்டாளர்களின் சந்திப்பு ஒன்று இருந்தது. அதில் மாஸ்டரும் பங்குபெற்றார். அவர்கள் அந்த வாரத்திற்கான நிகழ்ச்சியைப் பற்றி கலந்துரையாடினர். இக்கருத்தரங்கத்தில் கலந்துகொள்வதற்காக சுமார் எழுபது அப்யாசிகள் சீனா மற்றும் தூரக் கிழக்கு நாடுகளிலிருந்து வந்திருந்தனர். அக்டோபர் 2-ம் தேதி செவ்வாய் அன்று, மாஸ்டர் சீனக் கருத்தரங்கத்தின் பங்கேற்பாளர்களுடன் சேர்ந்துகொள்வதற்காக 'டார்ம்-Aகுச் சென்றார். அங்கு ஒரு சிட்டிங் கொடுத்துவிட்டு ஓர் உரையாற்றினார். அவரது உரையில், "நான் கல்லூரி மாணவனாக இருந்த நாட்களிலிருந்து, சீனப் பண்பாடு மற்றும் தத்துவத்தினால் கவரப்பட்டிருக்கிறேன். மேலும், தாவோ லே சிங், கன்ஃபியூஷியஸின் போதனைத் தொகுப்பு மற்றும், என்னைப் பெரிதும் கவர்ந்த 'ஐ-சிங்-மாற்றங்களின் புத்தகம்' ஆகியவற்றின் பிரதிகளை ஒருவாறாக முயன்று பெற்றேன்" என்று கூறினார். "ஒன்றிரண்டு இடங்கள்தான் எனினும், உங்கள் நாட்டையும் நான் நேரில் பார்வையிட்டிருக்கிறேன். என் மாஸ்டர் அனுமதித்தால் நான் மீண்டும் அங்கு வருவேன். ஆனால் அது வெகுதொலைவில் உள்ளது. ஆனாலும் ஒரு நாள், நான் கொல்கத்தா சென்று சில நாட்கள் ஓய்வெடுத்துவிட்டு, அங்கிருந்து குன்மிங் செல்லக்கூடும், நீங்கள் எல்லோரும் என்னை வரவேற்றால்" என்று கூறி, மீண்டும் சீனாவிற்கு போக வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார். சீன மற்றும் இந்திய மக்கள், பழங்காலப் பண்பாடு, தத்துவம் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றை பெருமளவு பகிர்ந்துகொள்கின்றனர் என்று மாஸ்டர் குறிப்பிட்டார். "நீங்கள் அனைவரும் இந்த முதியவனைப் பார்க்க மீண்டும் மீண்டும் இங்கு வரவேண்டும். எனக்கு சீன மொழி தெரியாதெனினும், என் மாஸ்டரின் அருளால், உங்களை சந்தித்து, ஒரு சில வார்த்தைகள் பேசி, அக்டோபர் 2013-ல் நடைபெறும் அடுத்த கருத்தருங்கத்திற்கு உங்களை வரவேற்கும் அளவிற்கு நான் உடல்நலத்துடன் இருக்கிறேன்" என்று கூறினார்.

ஒரு நாள் மாலை, ரஷ்யாவைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள், தாங்கள் திரும்பிச் செல்வதை மாஸ்டரிடம் சொல்வதற்காக அவரை சந்திக்க வந்தனர். தங்களுக்கு ஒரு செய்தி சொல்லுமாறு மாஸ்டரைக் கேட்டனர். அதற்கு மாஸ்டர், "உலகை மாற்றுவது நமது பணியல்ல. அது ஒரு பிரபஞ்ச வேலையாகும். ஆனால் நாம், மேலும் ஒன்று, மேலும் ஒன்று, மேலும் ஒன்று என, தெளிவான, அன்புள்ள இதயங்களை இதற்குள் (மிஷனிற்குள்) கொண்டுவந்து உதவி செய்யலாம். அதன் மூலம் மெதுவாக எல்லாம் மாறுகிறது. நீங்கள் ஒரு குளத்தில் கல்லை போட்டால், அதிலிருந்து அலைகள் உருவாகிச் செல்லும். நமது வேலை சிறியது என்றோ பெரியது என்றோ நாம் நினைக்கக்கூடாது. நாம் அதை உள்ளபடியே செய்கிறோம். பாபூஜி, நாம் இவ்வளவு செய்கிறோமே, இதற்கு பலன் இருக்குமா? என்று நான் பல முறைகள் பாபூஜி மகராஜ் அவர்களிடம் கேட்டதுண்டு. அதற்கு பாபூஜி, அந்த கேள்வியை ஒருபோதும் கேட்காதே என்று சொல்வார். ஆகவே, நாம் பலன்களைப் பற்றி நினைக்கக்கூடாது. வேலையை செய்துவிட்டு, அதன் பலன் பின்தொடரும் என்று நம்பிக்கைகொள்ள வேண்டும்" என்று கூறினார்.

# மணப்பாக்கத்தில் கருத்தரங்குகள்






## செப்டம்பர் 4-9, 2012

அலகாபாத் மையத்திலிருந்து சுமார் 630 அப்யாசிகள் இந்த கருத்தரங்கில் பங்குபெற வந்தனர். கருத்தரங்கின்போது எப்போதும் நிகழும் நிகழ்ச்சிகளான சத்சங்கங்கள், கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு அப்பாற்பட்டு அப்யாசிகளுக்கு மாஸ்டரைச் சிலமுறை சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அனைத்து அப்யாசிகளும் மாஸ்டரின் குடிலுக்கு வெளியில் ஒழுங்குடன் கூடியிருந்தனர். சில தினங்கள் மாலை நேரங்களில் தனது சக்கர நாற்காலியில் மாஸ்டர் வெளியில் வந்து அனைத்து அப்யாசிகளையும் சந்தித்தார். அப்யாசிகள் முழுமையான அமைதி காத்திருக்க அவர்களுடன் மாஸ்டர் சுமார் 10-15 நிமிடங்கள் அமர்ந்திருந்தார்.

## செப்டம்பர் 10-15, 2012

விசாகப்பட்டினம் மற்றும் டாசேப்பள்ளி மையங்களிலிருந்து இந்த வாரம் அப்யாசிகள் வருகை புரிகின்றனர். சுமார் 530 அப்யாசிகள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மாஸ்டர் Dorm A பகுதிக்கு ஒருமுறை சென்றதுடன் கருத்தரங்கின் ஒரு பகுதியாக சிறு உரையை நிகழ்த்தினார்.

## செப்டம்பர் 18-23, 2012

கடலோர ஆந்திரப் பிரதேசத்திற்குட்பட்ட கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி மற்றும் காக்கி நாடாவைச் சேர்ந்த மையங்களிலிருந்து வந்த அப்யாசிகளுக்கு இந்த கருத்தரங்கு நடைபெற்றது. மொத்தம் 430 அப்யாசிகள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர். செப்.22 அன்று மாஸ்டர் அனைத்து அப்யாசிகளையும் சந்தித்து அவர்களுக்கு ஒரு சிட்டிங் மற்றும் ஒரு உரை நிகழ்த்தினார். எப்போதும் நடைபெறும் சத்சங்கத்தைத் தவிர தினமும் உரைகள் இடம்பெற்றிருந்தன. அப்யாசிகள் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

## செப்டம்பர் 25-30, 2012

கொல்கத்தா மற்றும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த இதர மைய அப்யாசிகள், சிக்கிம் மற்றும் திரிபுரா மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் ஒன்றாக வந்து இந்த கருத்தரங்குகளில் கலந்து கொண்டனர். சகோதரர் கமலேஷ் அவர்கள் இந்த கருத்தரங்கு மற்றும் பிற கருத்தரங்குகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்து கொண்டார். அவர் பல்வேறு உரைகள் வழங்கினார். அதில் முக்கியமாக மாஸ்டரின் அருகாமையில் இருக்க வேண்டி முயற்சி செய்வதைத் தவிர்த்து தன்னுள் இருக்கும் மாஸ்டரின் பிரசன்னத்தில் கவனம் செலுத்தி அந்த நிலையைத் தக்க வைத்துக் கொண்டு ஆன்மீக ரீதியாக மாஸ்டர் நமக்கு ஆற்றும் பணிகளை உணர்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மாஸ்டர் அப்யாசிகளை சந்திப்பதற்கு திட்டம் வைத்திருந்த போதிலும் ஆசிரமத்தின் வெளியில் சாலையமைப்புப் பணிகள் நடைபெற்றதின் காரணமாக அவரால் வெளியில் வர இயலவில்லை. எனவே அனைவரையும் மாஸ்டர் சகோதரர் மாதவாவின் இல்லத்திலேயே சந்தித்தார். கொல்கத்தா அப்யாசிகள் ஒரு நாள் மாஸ்டரைச் சந்திக்கச் சென்றனர். மற்றொரு நாள் சிக்கிம் அப்யாசிகள் மாஸ்டரைச் சந்திக்கச் சென்றனர். இந்த வகையாக மாஸ்டர் ஆன்மீகப் பணி செய்தது மட்டுமின்றி மேலும் அதிக முயற்சி எடுத்துக்கொண்டு அனைத்து அப்யாசிகளை சந்திக்கவும் செய்தார். மொத்தமாக 460 அப்யாசிகள் கலந்து கொண்டனர். எல்லா இடங்களிலும் அப்யாசிகள் நிறைந்து, ஆசிரமம் உயிரோட்டத்துடன் காணப்பட்டது. ஒரு புதிய ஆற்றலையும் அனைவரும் உணர்ந்தனர்.

## அக்டோபர் 2-7, 2012

சுமார் 70 அப்யாசிகள் சீனா மற்றும் தொலைதூர கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்து இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். மாஸ்டர் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள்









சம்பந்தமாக செய்திகளை கேட்டுக்கொண்டதுடன் தேவைப்பட்டபோது சரியான வழிமுறைகளையும் வழங்கினார்.

## அக்டோபர் 9-14, 2012

ஏறக்குறைய 530 அப்யாசிகள், சென்னை பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில் அவரின் குடையின் கீழ் தெய்வீக பிரசன்னத்தின் சந்தோஷத்தைப் பெற அருள் பெற்றிருந்தனர்.

தினந்தோறும் மூன்று சக்தி வாய்ந்த சத்சங்கங்கள், ஒவ்வொருவரையும் நிறைவடையச் செய்தன. அமைதியான சூழல், தன்னார்வ தொண்டர்களின் அர்ப்பணிப்பு, அகக்கண் திறக்கும் உரைகள் மற்றும் ஆசிரமத்தின் அமைதி ஆகியவை அற்புதமாக இருந்தன. அனைவரும் அதனை மேலும் விரும்பினர்.

மாஸ்டர் தியான மண்டபத்திற்கு வருகை புரிந்து உரை நிகழ்த்தினார். அவரின் பிரசன்னம் அனைவருக்கும் ஆச்சரியமூட்டியது. சகோ. கமலேஷுடன், அவரது அலுவலகத்தில் நேரத்தை செலவிட்டது, மற்றுமொரு ஆச்சரியம் ஆகும். அங்கே அன்பு பரவியிருந்தது.

ஒரு வாரம் என்பது மிகக் குறைந்த நாட்களே. ஆனால் நாம் எதைப் பெற்றோமோ, அது வரப்போகும் பலப்பல காலங்களுக்கும் நிலைத்திருக்கும். அவர் அளித்துள்ள நிலையை தக்க வைத்துக்கொள்வதுதான் தற்பொழுது நமது கடமையாகும். இந்த பயணம் இதைவிட சிறந்ததாக இருந்திருக்க முடியாது. எனவே ஒரு முழுமையான மற்றும் பயனுள்ள வருகையாக அனைவராலும் அனுபவிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.



## இணையதள வழி நடத்தும் உதவி, லக்னௌ

லக்னௌ ஆசிரமம், இணையதளத்தை சரிவர பயன்படுத்த இயலாத அப்யாசிகளுக்காக, மின்-எளிமைபடுத்தும் உதவி என்பதை அறிமுகப்படுத்தியுள்ளது. அப்யாசிகள் அடிப்படையான மின்-அஞ்சல் அனுப்புதல், மிஷனின் வலையதளத்தை ஆய்வு செய்தல், தினசரி பிரதிபலிப்பு (Daily Reflection) ஒளி உலகிலிருந்து மென்குரல்கள், சகஜ சந்தேஷ் ஆகியவற்றைப் பதிவு செய்தல், இணையதளம் மூலம் விண்ணப்பங்களை பூர்த்தி செய்தல் ஆகிய பலவற்றைக் கற்றுக்கொள்ள இது உதவிபுரிகிறது. சமீபத்திய உரைகள் மேலும் எல்லாவிதமான மின்-அஞ்சல் வாயிலாக பெறப்படும் விரைவுச் செய்திகள் ஆகியவற்றை, அப்யாசிகள் உடனுக்குடன் அறிந்து கொள்ள இது துணைபுரிகிறது.

## மங்களூர் ஆசிரமத்திற்கான இடம்



மங்களூர் அப்யாசிகளின், தியானத்திற்கான நிரந்தர இடம் தேடல், மங்களூரிலிருந்து 18 கி.மீ. தொலைவில், மங்களூர்-பெங்களூர் நெடுஞ்சாலையில், பாண்ட்வெல் தாலுக்காவில், 12 ஏக்கர் இடம் வாங்கியதன் மூலம் முற்றுப்பெற்றது. அந்த இடம் கனரா பொறியியல் கல்லூரிக்கு எதிர்புறமாக, நெடுஞ்சாலையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. நான்கு ஏக்கர் நிலம் ஆசிரமம் கட்டவும், மீதம் உள்ள 8 ஏக்கர் நிலம் அப்யாசிகளுக்கு குடியிருப்பு வளாகம் கட்டவும் பயன்படுத்தப்படும்.

19 செப்டம்பர் 2012 அன்று கட்டிடப்பணி தொடங்கும் முன் சத்சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாஸ்டர் தமது ஆசிகளைத் தெரிவித்தார். மேலும் சகோ. கமலேஷ் அவர்கள் அப்யாசிகள் தெளிந்த மனநிலையில் இருக்க, முந்தின நாளும் தியானம் செய்யும்படி அறிவுறுத்தினார். மங்களூர், புத்தூர், மைசூரைச் சேர்ந்த 50 அப்யாசிகள் சத்சங்கத்தில் பங்கேற்றனர். அச்சூழல் மாஸ்டரின் அருளால் நிறைந்திருந்தது. சத்சங்கத்திற்குப் பிறகு சகஜமார்க்க கோட்பாடு-15 ல் பிரசுரிக்கப்பட்டிருந்த மாஸ்டரின் செய்தி சகோ.பிரசாத் அவர்களால் வாசிக்கப்பட்டது. பின்னர் அவர் உரையாற்றி, மேலும் சகோ.சுப்ரையா அவரின் பணியையும் பாராட்டினார். சகோ.ராதாகிருஷ்ணா, சகோ. அன்னாசிரால், சகோதரி நளினி ஆகியோரும் உரையாற்றினர். சகோதரி வனஜாக்ஷி, மறைந்த சகோ. சார்னாட் எழுதிய பஜனையை பாடினார். சத்சங்கம் முடிந்தவுடனே சாலை அமைத்தல் மற்றும் கட்டிட வரையறை ஆகிய பணிகள் தொடங்கின. சத்சங்கங்கள் நடத்துவதற்காக, தற்காலிக தியான மண்டபம் ஒன்று, மிக விரைவில் அமைக்கப்பட உள்ளது.

# இளைஞர் நிகழ்ச்சிகள்

## இளைஞர் நிகழ்ச்சி, கொல்கத்தா

அக்டோபர் 14 மற்றும் 15ம் தேதியில் பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில் சுமார் இருபத்தி ஐந்து அப்யாசிகள் ஒன்று கூடினர். சத்சங்கம் மற்றும் காலை உணவிற்கு பின், Grounding in the practice ல், 'பிரார்த்தனை' என்னும் தலைப்பை சகோதரி லீனா தாவே நடத்தினார். அப்யாசிகள் அனைவரும் பிரார்த்தனையின் ஆழ்ந்த பொருளை உணர்ந்ததாகக் கூறினார்கள். மாலையில் 'சேவை' பற்றி மாஸ்டர் ஆற்றிய இரு உரைகள் காண்பிக்கப்பட்டன.

15ம் தேதியன்று, ஒரு அப்யாசியின் வாழ்க்கையில் '3M-களின் முக்கியத்துவம் குறித்த, ஆறு கேள்விகளையுடைய உள்ளார்ந்து ஈடுபடும் நிகழ்ச்சியொன்று இருந்தது. இந்நிகழ்ச்சி, சுய பரிசோதனைக்கு ஒரு வாய்ப்பாக மட்டும் அமையாமல், அனுபவங்களை நேர்மையாக பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கும் ஒரு நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

மதிய வேளையில், க்ரெஸ்ட், கரக்பூர் பற்றிய படத்தொகுப்பு ஒன்று காண்பிக்கப்பட்டது. மேலும் அப்யாசிகள், வரவிருக்கும் இளைஞர் கருத்தரங்கில் கலந்துகொள்ள ஊக்குவிக்கப்பட்டனர். அடுத்து 'சேவை' பற்றி மாஸ்டர் ஆற்றிய மற்றொரு உரை தொடர்ந்தது.

இவ்விரு நாட்களிலும், தம் பயிற்சிமுறைகளை குறிப்பிட்ட நேரத்தில் செய்து, ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்கு இளைஞர்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். நிகழ்ச்சி, சத்சங்கத்துடன் மாலை4.00மணியளவில் நிறைவு பெற்றது. இளம் அப்யாசிகள் இரு நாட்களும் ஆசிரமத்தில் தங்கி இருந்தனர்.சமையலறை தன்னார்வத்தொண்டர்களும், ஆசிரம மேலாளரும் இளைஞர்களுடன் இணைந்திருந்தனர். மேலும் அவர்களிடையே ஒரு சிறப்பான பிணைப்பு ஏற்பட்டது.

## அஹ்மத்நகர் மையம், மஹாராஷ்ட்ரா

ஆகஸ்ட் 26ம் நாள், இளைஞர் நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது. 18 முதல் 35 வயதுள்ள 8 அப்யாசிகள் கலந்து கொண்டனர். மையத்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இளம் அப்யாசிகளின் பங்கேற்பு, என்பதே நிகழ்ச்சியின் முக்கிய குறிக்கோளாகும். நிகழ்ச்சி பஜனையுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து சம்ஸ்காரங்களின் வேலையை கருத்தாகக் கொண்ட நாடகம் நிகழ்த்தப்பட்டது. 'ஆர்வமுள்ள அப்யாசிகளிடம் சகஜ மார்க்கத்தை எவ்வாறு விவரிப்பது', 'லௌகீக மற்றும் ஆன்மீக வாழ்க்கையை சமநிலைப்படுத்துதல்' போன்ற தலைப்புகளில் உரைகளும், கலந்துரையாடல்களும் இருந்தன. நிகழ்ச்சியை நிறைவு செய்யும் போது, "ஐரோப்பிய இளைஞர் கருத்தரங்கின்' படத்தொகுப்பு காண்பிக்கப்பட்டது. அனைத்து அப்யாசிகளும் விருப்பத்துடனும், உற்சாகத்துடனும் அனைத்து கலந்துரையாடல்களிலும் பங்கேற்றார்கள். நிகழ்ச்சி ஆக்கபூர்வமானதாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது.




## உலகளாவிய இளைஞர்கள் வலையமைப்பு

உலகிலுள்ள சகஜ மார்க்க இளைஞர்களின் சமூகத்தை உருவாக்கவே இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இணையதளமே இயல்பான தொடக்க இடமாக ஆனது. பங்கேற்பாளர்கள் மிகுதியானதால், இணையதள கருத்தரங்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இங்கு 'சைபர் கேதரிங்' முறையில் அப்யாசிகள் ஒன்றிணையவும், பங்கு கொள்ளவும் முடியும். இந்த வலையமைப்பு, சகஜ மார்க்கத்திற்கு புதிதாக வந்தவர்களை மேம்படுத்த உதவும். மேலும் பல திட்டங்களுக்கு நிறைய தன்னார்வத்தொண்டர்களை உடனடியாக ஒன்று சேர்க்கவும் முடியும்.

இளம் அப்யாசி பொதுவாக தனிமனிதராகவோ அல்லது சமீபத்தில் திருமணமானவராகவோ இருப்பார். பலர் படித்துக் கொண்டோ அல்லது தங்களது பணியைத் தொடங்குபவர்களாகவோ இருக்கிறார்கள். வாழ்க்கை பரபரப்பாகவும், மாற்றம் நிறைந்ததாகவும், ஆசை மற்றும் சபலத்தால் சூழப்பட்டுமுள்ளது. இந்தத் தருணங்களில், பயிற்சி, மிக முக்கியமானது. இருப்பினும் எதிர்பாராத விதமாக சில நேரங்களில் அது ஒதுக்கி வைக்கப்படுகிறது.

முதல் இணையதள கருத்தரங்கு ஜூன் 29ம் தேதியன்று நடந்தது. சகோ.பில் வேகாட், இளைஞர்களை மிஷனில் ஈடுபடுத்திக்கொள்ள ஊக்கப்படுத்தினார். மேலும் சகோ. சந்தோஷ் காஞ்சி பயிற்சியிலுள்ள ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஆகஸ்ட் 25ம் தேதி, ஒரு குழு இணையதளத்தில் மீண்டும் கூடியது. அவர்கள் கலிபோர்னியா, ஆஸ்திரேலியா, லத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்கள். உற்சாகமூட்டும் அழகிய கருத்துரைகள், இடம் மற்றும் காலத்தால் ஏற்பட்ட எல்லைகளுக்கு அப்பால், அன்புச்சூழ்நிலையை உருவாக்கின.

இதன் செய்திகள் மற்றும் அழைப்பிற்கு பதிவு செய்ய: https://docs.google.com/spreadsheet/viewform?formkey=dE8wRmdCR2txVkNlcXAtTmNCX2d3UHc6MA#gid=0

## சகஜ சிற்றுலா, பில்வாரா, ராஜஸ்தான்

செப்டம்பர் 29ம் தேதியன்று, இருபத்திரெண்டு இளைஞர்களும், அப்யாசி குழந்தைகளும், ஹரிணி மஹாதேவ் என்னும் சிற்றுலா மையத்தில் ஒன்று கூடினர். 'சிங்க நெஞ்சம்' என்ற தலைப்பில், தலைமை பண்புகள் மற்றும் பயமின்மை ஆகியவை பற்றி கலந்துரையாடப்பட்டது. கேள்வி-பதில் நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டு, கலந்து கொண்டவர்களின் பதில்கள், அத்தலைப்பில் மாஸ்டர் கொடுத்துள்ள கருத்துகளோடு பொருத்தி பார்க்கப்பட்டன. மூன்று குழுவாக பிரிந்து, பேச்சு இல்லாமல் பரிமாற்றம் செய்தல் என்ற விளையாட்டு மகிழ்வூட்டுவதாகவும், சிந்தனையூட்டுவதாகவும் அமைந்தது. பங்கு கொண்ட அனைவரும் இந்த சிற்றுலாவை பாராட்டினர்.



## திருப்பூர் வைர விழா பூங்காவில் NSS முகாம்



செப்டம்பர்23ம் தேதியிலிருந்து செப்டம்பர் 29ம் தேதி வரை திருப்பூர் வைர விழா பூங்காவில் நடை பெற்ற NSS முகாமில் 60 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதை, SRCM, நஞ்சப்பா மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மற்றும் KSCஅரசு மேல்நிலைப்பள்ளி ஆகியவை இணைந்து நடத்தின.

செப்டம்பர் 23ம் தேதியன்று நடை பெற்ற திறப்பு விழாவில், இவ்விரு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும், மற்றும் பல பள்ளிகளிலிருந்து வந்திருந்த ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். சாலை விதிமுறைகள் மற்றும் பாதுகாப்பு, பிளாஸ்டிக்கை தவிர்த்தல், டெங்கு காய்ச்சல், முதலுதவி, மரக்கன்று நடுதல் முதலியவை பற்றி பல சமூக நலத்தொண்டர்களும், அப்யாசிகளும் உரையாற்றி விழிப்புணர்வூட்டினர். மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில், வினா-விடை, 'விவேகானந்தரும் ஆன்மீகமும்' என்ற தலைப்பில் உரை, மற்றும் இயற்கையை பேணுவதின் அவசியம் பற்றிய ஒரு சிறு திரைப்படம் முதலியன இடம் பெற்றன.

29ம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவிற்கு, பஞ்சாயத்து தலைவர் திரு. பழனிசாமி தலைமை தாங்கினார். திருப்பூர் (தெற்கு) காவல் துணை ஆய்வாளர், திரு. ராஜாராம், மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். மாணவர்களும் ஆசிரியர்களும் வைர விழாப் பூங்காவில் ஏழு நாட்கள் தங்கியிருந்தனர். வந்திருந்த அனைவருக்கும் சகஜ மார்க்கத்தைப்பற்றியும், மாஸ்டர்களைப்பற்றியும் அறிய ஒரு வாய்ப்பாக அமைந்தது.

## தமிழ்நாட்டின் தென்பிராந்தியத்திற்கு மண்டல பொறுப்பாளரின் பயணம்.



தமிழ்நாடு (தெற்கு) மண்டல பொறுப்பாளர் சகோ. T.V. விசுவநாத ராவ் அவர்கள் ஆகஸ்ட்22ம்தேதியிலிருந்து ஆகஸ்ட்26ம் தேதி வரை தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொண்டார். சின்னவல்லிக்குளம், சிவகாசி, கோவில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, சேரன்மாதேவி, வள்ளியூர், களக்காடு, கோட்டைகருங்குளம் மற்றும் வடக்கன்குளம் முதலிய மையங்களை பார்வையிட்டார். சாத்தூர் மற்றும் ஆலமரத்துப்பட்டியில் ஒரு சில அப்யாசிகளுடன் புது மையங்கள் தொடங்கப்பட்டன.

சகோ ராவ் தூத்துக்குடியில் NTPCயிலும், ஹோலிகிராஸ் ஹோம்சயன்ஸ் கல்லூரியிலும் வரவேற்புக்கூட்டத்தில் உரையாற்றினார். பிறகு, சமூகரங்கபுரம், முக்கூடல் என்ற ஊர்களிலும் உரையாற்றினார். இப்பயணத்தில் பல் வேறு இடங்களில் புது அப்யாசிகளுக்கு அறிமுக சிட்டிங் கொடுக்கப்பட்டது. இது தமிழ்நாட்டின் இப்பகுதிகளில், மிஷனின் பணிகள் உயிரோட்டத்துடன் அமைய காரணமாயிற்று.

## மதுரை ஆசிரமத்தில் ஆன்மீக முகாம்

பிராந்திய ஒருங்கிணைப்பாளர் சகோ. N. பிரகாஷ், மண்டல பொறுப்பாளர் சகோ. T.V. விஸ்வநாத ராவ் இருவரும் மதுரை ஆசிரமத்திற்கு வருகை புரிந்து

28ம் தேதியிலிருந்து 30 ம் தேதி வரை ஆன்மீக முகாமை தொகுத்து வழங்கினர். மதுரை மற்றும் சுற்றுப்புற இடங்களிலிருந்து சுமார் 625 அப்யாசிகள் இதில் பங்கேற்றனர்.

28ம் தேதி மாலை 5:15 சத்சங்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இரவு உணவு, மற்றும் உலகளாவிய பிரார்த்தனைக்குப்பின், 9:15மணிக்கு மற்றுமொரு சத்சங்கம் நடை பெற்றது. சகோ. பிரகாஷ் பேசுகையில், இது ஒரு ஆழ்ந்த ஆன்மீக முகாமென்றும் , சத்சங்கங்களின் இடையே கிடைக்கும் நேரத்தில், யாவரும், எவ்வளவு முறை முடியுமோ அவ்வளவு தடவை தியானத்தில் அமர்ந்தோ, மிஷனின் புத்தகங்களைப்படித்தோ, மௌனத்தில் அமர்ந்தோ, மாஸ்டரின் அருளையும், பிராணாஹுதியையும் ஜீரணித்துக்கொண்டோ, மனதின் ஆழத்தில் சென்று சுயபரிசோதனை செய்து மாஸ்டரின் பிரசன்னத்தை அவர்களுள் உணருமாறு அறிவுறுத்தினார்.

அப்யாசிகள், தங்களின் உள்ளார்ந்த நிலையையும், மாற்றத்தையும் நாட்குறிப்பில் பதியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். நாட்குறிப்பு எழுதுவதின் அவசியத்தைப்பற்றியும், தியானத்திற்கு முன்னும், பின்னும், தன் உள்நிலையை அறிய யோசனைகளையும் கொண்ட துண்டு பிரசுரங்கள் யாவருக்கும் அளிக்கப்பட்டன.

29ம் தேதியன்று நான்கு சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. சகோ. பிரகாஷ் ஒவ்வொரு சத்சங்கத்திற்குப்பின்னும் 'ஒளி உலகத்தின் மென்குரல்கள்' புத்தகத்திலிருந்து செய்திகள் வாசித்தார். 30ம் தேதி ஞாயிறு காலை 7:30 மற்றும் 11:30 சத்சங்கங்களை சகோ.பிரகாஷ் நடத்தினார். சத்சங்கத்திற்கு பின் பேசிய சகோ. ராவ், இம்முகாம் அப்யாசிகளுக்கு, தங்கள் மீது பணியாற்றிக் கொள்ள மிக உபயோகமாக இருக்குமென கருத்து தெரிவித்தார். சகோ. பிரகாஷ், அப்யாசிகள் யாவரும் அன்பு, ஒத்திசைவு, சமூகத்தில் அமைதி போன்ற, மாஸ்டர் விரும்பும் நற்பண்புகளை எடுத்துச்செல்லும் ஊர்திகளாக மாறவேண்டுமென கூறினார்

# பயிற்சி நிகழ்ச்சிகள்

## வெளியீட்டு முகாம் - மங்களூர், கர்நாடகா



மிஷனின் இலக்கியங்களை வாசிப்பதில் உள்ள அனுபவங்களையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வது பற்றிய ஒரு முழு நாள் கலந்தாய்வு மங்களூர் மையத்தில், 58அப்யாசிகளுக்காக நடத்தப்பட்டது. அந்தக் கலந்தாய்வில், வாசிப்பதில் உள்ள முக்கியத்துவம், நாம் ஏன் வாசிக்க வேண்டும், அதன் ஆன்மீக நற்பயன்கள், எவ்விதமான தன்னியல்புடன் நாம் அதை வாசிக்க வேண்டும், நாம் நமது ஆன்மீக லட்சியத்தை அடைவதற்கு புத்தகங்கள் தரும் வழி காட்டுதல் போன்ற விஷயங்கள் அடங்கியிருந்தன. நிகழ்ச்சியின் போது, மாஸ்டரின் சொற்பொழிவுகளிலிருந்து அறிவொளியூட்டக் கூடிய மற்றும் விவரங்கள் நிறைந்த, நிறைய ஒளி மற்றும் ஒலிக் காட்சிகள் திரையிட்டுக் காட்டப்பட்டன. அந்த கூட்டம் சத்சங்கத்துடன் முடிவடைந்தது.

## ப்ரிபெக்ட் கருத்தரங்கு, கேரளா

செப்டம்பர் மாதம் 23 ஆம் தேதி வடக்கு மலபார் மையங்களில் இருந்து ப்ரிபெக்டுகள், மைய வளர்ச்சிக்கு உகந்த பல கருத்துக்களையும், முழு நாள் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான கருத்துக்களையும் பற்றி கலந்துரையாடல் நிகழ்த்துவதற்காக, தலச்சேரியில் ஒன்று கூடினர். முழு நாள் நிகழ்ச்சிகளின் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளிலிருந்து, பேசுபவர்கள் விலகிச்செல்லாதிருக்க வேண்டும் என்றும், எல்லா அப்யாசிகளுக்கும் பேசுவதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. உதாரணங்கள் கூடுமான வரையில் சகஜ மார்க்க இலக்கியங்களிலிருந்தே மேற்கோள் இட்டுக் காட்டப்பட வேண்டும். "ஒளியுலகிலிருந்து மென்குரல்களில்"வரும் அருட்செய்திகளைச் சார்ந்து ஒரு முழு நாள் நிகழ்ச்சி, அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி நடத்துவதென தீர்மானம் செய்யப் பட்டது.

## பிரசுரிக்கும் வேலையை விரிவுபடுத்துதல், மைசூர்

பிரச்சாரக்குழு தன்னார்வலர்களின் மாவட்ட அளவிலான கலந்தாய்வு, மைசூரில், செப்டெம்பர் 1, 2ஆம் தேதிகளில் நடைபெற்றது. 15 மையங்களில் இருந்து வந்திருந்த 43 அப்யாசிகள் அதில் கலந்து கொண்டனர். சாதனாவே சிறந்த தன்னார்வத் தொண்டிற்கு அடித்தளமாக அமையும் என்ற கருத்துடன் அந்த நிகழ்ச்சி ஆரம்பமானது. பிரச்சார வேலையின் அங்கங்களான, தன்னார்வலர்கள், விஷயங்கள், அடிப்படை வசதிகள், விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகிய அம்சங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டன. தன்னார்வத் தொண்டர்கள் மிஷனின் இலக்கியங்களைப் படிப்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப் பட்டது. மாவட்ட அளவிலான திட்டங்களும், வழி வகைகளும் விவாதிக்கப்பட்டன. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அந்த திட்டங்களை அனைவரின் நலனிற்காகவும் பகிர்ந்தளித்தனர்.



## அவலோகனா, பங்களூரு, கர்நாடகா

கன்னடத்தில், சகஜ மார்க்கத்தைப் பற்றிய ஒரு மேம்பட்ட பயிற்சி நிகழ்வு, செப்டெம்பர் 8 - 9 ஆம் தேதிகளில் பனசங்கரி ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஏறத்தாழ175 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அப்யாசிகள் தற்சோதனை செய்து கொள்வதற்கு ஏதுவானதாகவும், சகஜ மார்க்கத்தின் மிகவும் நுட்பமான மற்றும் மிகவும் ஆழமான கருத்துக்களைப் புரிந்து கொள்ளச் செய்வதற்குமான நோக்கத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக்களாவன: சகஜ மார்க்கத் தத்துவம், சாதனாவின் நுட்பமான பகுதிகள், சகஜ மார்க்கம் வாழ்க்கையின் வழிமுறை, நமது பரிணாம வளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு, அவருடனான நமது உறவுமுறை, ஆன்மீகப் பயணத்தின் நிலைகள், வளர்ச்சி, தன்மை மாற்றம் மற்றும் தற்சோதனை போன்றவையாகும். மாஸ்டரின் மேற்கோள்களிலிருந்து ஆன்மீகப் பொருளர்த்தங்கள் பற்றிய விளக்கங்களும், கேள்வி பதில் பகுதியும், அனைவரும் கலந்து கொள்வதை உறுதி செய்யும் வண்ணமாக, அப்யாசிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## கன்னடத்தில் மொழி பெயர்ப்பு பயிற்சி நிகழ்வு



கன்னடத்தில் மொழி பெயர்த்தல் பற்றிய பயிற்சி நிகழ்வு, இரண்டு நிலைகளாக, ஜூன் 17ஆம் தேதியும், ஆகஸ்ட் 5ஆம் தேதியும் நடந்தது. ஆர்வமிக்க அப்யாசிகளுக்கு, மாஸ்டரின் சொற்பொழிவுகள், புத்தகங்கள், ஒளிக் காட்சிகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலிருந்து, கன்னடத்திற்கு மொழி பெயர்ப்பு செய்ய பயிற்சி அளித்தல், அதன் மூலம், மொழி பெயர்ப்பாளர்களின் குழுவை விரிவாக்குதல், நேர்த்தியான மொழி பெயர்ப்பு வேலையை குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் செய்து முடிப்பதற்கு ஏதுவானவற்றை செய்வதல் ஆகியவையே இதன் நோக்கம் ஆகும். இந்த நிகழ்வு, சகோ.ராம சாஸ்த்ரி மற்றும் சகோ.சுப்ரமண்யா B.G. ஆகியோர்களால், இதில் பங்கேற்ற 17 அப்யாசிகளுக்காக நடத்தப்பட்டது.

முதல் நிலையில், பயிற்சியாளர்கள், சகஜ மார்க்க இலக்கியத்திலிருந்து ஒரு சில ஆங்கில தொகுப்புக்களுக்கான அவர்களது மொழி பெயர்ப்புக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இரண்டாவது நிலையில், அங்கும் இங்குமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொழி பெயர்ப்புக்கள் ஒப்பு நோக்கப்பட்டன. நேர்மையான சிறப்பியல்புகளும், குறைபாடுகள் உள்ள பகுதிகளும் விவாதிக்கப்பட்டன. மொழி பெயர்ப்பு செய்வதற்கும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வரும் மிஷனின் பத்திரிக்கைகளில் குறிப்புக்கள் எழுதுவதற்கும் ஒரு சில ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி நோக்கம் நிறைந்ததாகவும், பயிற்சியாளர்களுக்குப் பயனுள்ளதாகவும் இருந்தது.

# வழிகாட்டுதல்





## அகமதாபாத், குஜராத்

புதிய முயற்சியின் ஒரு பகுதியாக மையப்பொறுப்பாளர், சகோ.ஜிங்னேஷ் ஷெலட், கல்லூரி மாணவர்களை, அகமதாபாத் ஆசிரமத்திற்கு வந்து, "வாழ்க்கையின் உண்மையான லட்சியத்தைப் புரிந்து கொள்ளுதல்" என்ற கருத்தின் அடிப்படையிலான பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும்படி அழைத்திருந்தார். 2012 ஆகஸ்ட் 7ம் தேதி எட்டு கல்லூரிகளில் இருந்து மொத்தம் அறுபத்தேழு மாணவர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். அறிமுக உரையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. அதன் பிறகு ஐந்து தலைப்புகளின் கீழ் நடைபெற்ற குழு விவாதங்களில் உற்சாகத்துடன் கலந்து கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். பயிற்சி முகாம் பற்றிய சுருக்க உரையின் போது, சகஜ மார்க்க தியான முறை பற்றி விரிவாக விளக்கப்பட்டது. பலர் இம் மார்க்கத்தில் சேர ஆர்வம் காட்டினர். பயிற்சி முகாமின் போது முழுநேரமும் மாஸ்டரின் அருள் உணரப்பட்டது.

## திருவனந்தபுரம், கேரளா

இன்போசிஸ் மற்றும் ஏர்னஸ்&எங் நிறுவனங்களின் HR குழுக்களுடைய அழைப்பின் பேரில் அங்கு மூன்று வரவேற்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகள், ஆகஸ்ட் 9 மற்றும் 13ம் தேதிகளில் இன்போசிஸின் டெக்னோ பார்க்கிலும், செப்டம்பர் 6ம் தேதி ஏர்னஸ்&எங் நிறுவனத்திலும் நடத்தப்பட்டன. இரண்டு நிறுவனங்களும் ஒரு வாரத்திற்கு முன்பாகவே, அனைத்து அலுவலர்களுக்கும் அழைப்பிதழை அனுப்பி இருந்தன. வேலை மற்றும் வாழ்க்கை ஆகிய இரண்டினையும் சமப்படுத்துதல், உள்ளார்ந்த அமைதி, ஒற்றுமை ஆகியவற்றினை தியானம் எவ்வாறு அளிக்கிறது, ஒரு மனிதர் உண்மையான தன்மை மாற்றத்தினைப் பெற தியானம் எவ்வாறு உதவுகிறது என்பவை குறித்த கலந்துரையாடலுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. பின்னர் தியானத்தின் குறிக்கோள், இதயத்தில் தியானம், வழிகாட்டுபவரின் தேவை, SRCMன் செயல்பாடுகள் ஆகியவற்றினைப்பற்றி விவரிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் பங்குகொண்டவர்கள் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் பங்கு கொண்டு இடை இடையே கேள்விகள் கேட்டனர்.

## லும்டிங், அஸ்ஸாம்

அஸ்ஸாமில் கௌஹாத்திக்கு அருகில் லும்டிங் என்ற சிறிய ஊரில் செப்டம்பர் 1ம் தேதி வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. சகஜமார்க்கத்தினைப்பற்றிய அறிமுகமே இல்லாத அந்த இடத்தில் வரவேற்புக் கூட்டம் நடத்துவதற்கு சகோ.அவிஜித் டே கடினமாக உழைத்திருந்தார். அங்கிருந்த மாணவர்கள், ஆசிரியர்கள், வக்கீல்கள் மற்றும் தொழிலதிபர்கள் அடங்கிய முப்பத்து நான்கு ஆர்வமிக்கவர்கள் முன்பாக

"மனித வாழ்க்கையில் தியானத்தின் பங்கு" என்பது பற்றி சகோ.அசோக் சென்குப்தா பேசினார். பங்குகொண்டவர்களில் பெரும்பான்மையினர் வங்காள மொழி பேசுபவர்களாக இருந்தமையால் நிகழ்ச்சிகள் வங்காள மொழியில் நடத்தப்பட்டன. மண்டல பொறுப்பாளர் சகோ.தானி சந்த் மற்றும் சகோ.ராஜு சர்மா ஆகியோரும் வருகை தந்திருந்தனர். மொத்தம் பதினான்கு ஆர்வலர்கள் அப்யாசிகள் ஆனார்கள். மேலும் ஐந்து பேர் அடுத்து வரும் வாரங்களில் பயிற்சியினைத் தொடங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## புரோட்டடூர், ஆந்திர பிரதேஷ்

கடப்பா மாவட்டம் புரோட்டடூருக்கு அருகில் உள்ள ராயலசீமா அனல் மின் நிலைய (RTPP) பொறியாளர் சங்கத்தினரின் அழைப்பின் பேரில், அங்கு பணிபுரியும் 150 பொறியாளர்களுக்காக செப்டம்பர் 1ம் தேதி வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. சகஜ மார்க்கத் தியானம், தியானத்தின் முக்கியத்துவம், மற்றும் நமது மார்க்கத்தின் சிறப்பு அம்சங்கள் ஆகியன குறித்து சகோ.டி.பிக்ஷம் விளக்கிக் கூறினார். பங்கு கொண்டவர்கள் உண்மையிலேயே, இதனைப் புரிந்து கொண்டு மன நிறைவு பெற்றனர். அவர்களில் முப்பத்தைந்து பேர் பயிற்சியினைத் தொடங்கினர்.

அன்றைய தினமே அருகில் உள்ள மையங்களின் அப்யாசிகளுக்காக ஒன்று கூடும் நிகழ்ச்சி நடை பெற்றது. புரோட்டடூர் சிறிய மையமாக இருப்பினும் 300 அப்யாசிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இதனை மண்டல பொறுப்பாளர் சகோ.எம்.ஆர்.கங்காதர், சகோ. டி.பிக்ஷம் ஆகியோர் நடத்தினர்.

## ஸ்ரீநகர், ஜம்மு&காஷ்மீர்

மத்திய ரிசர்வ் காவல் படை வளாகத்தில் செப்டம்பர் 1 ம் தேதி CRPF அலுவலர்களுடைய மனைவியர்களுக்காக அறிமுகக் கூட்டம் நடை பெற்றது. உடலும் மனதும் ஒன்றாக இணைந்து வளர்ச்சி பெற, இதில் கலந்து கொண்ட இருபது பேர்களுக்கு, சகோ. சந்திப் தத்தாவின் மனைவி, சகோதரி ரஜ்னி தத்தா, ஒரு உடற் பயிற்சி நடத்தினார். "நல்ல குடும்பம் ஒரு பெண்மணியின் பொறுப்பு" என்ற கருத்தின் அடிப்படையில், சகோதரி சந்திரகாந்தா மற்றும் சகோதரி ரஜ்னி தத்தா ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். மனித மனத்தின் அடிப்படை அச்சம் மற்றும் பதட்டம்





ஆசியவற்றிலிருந்து, அமைதி கடலாக உள்ள ஆத்மாவை அடைவதிற்கான வழிமுறை பற்றி விளக்கப்பட்டது. வந்திருந்தோரில் பலர் சகஜ மார்க்க பயிற்சியை ஆரம்பிக்க ஆர்வமாயிருந்தனர். தங்கள் குழந்தைகளுக்கு வழிகாட்டிகளாக இருப்பதினால், தங்களின் உள் மதிப்புகளை ஒற்றியே அமைந்திருக்கும் நடத்தை சரியாக இருக்கவேண்டியதின் அவசியத்தை அவர்களால் உணர முடிந்தது.

இதே போன்ற ஒரு நிகழ்ச்சி, CRPF அதிகாரிகள் மற்றும் 82வது பட்டாலியனை சேர்ந்த ஜவான்களுக்கு செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி ஸ்ரீநகரில் நடத்தப்பட்டது.

## மங்களூர், கர்நாடகா

கடந்த செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி அன்று, சீனிவாசா மேலாண்மை கல்லூரியை சேர்ந்த முதலாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு MBA மாணவர்கள், B.Ed முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட 200 பேர்களுக்கு வரவேற்புக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. சகோதரர் கிருஷ்ண பிரசாத் சகஜ மார்க்க முறையைப்பற்றி எடுத்துரைத்தார். தியான முறை பற்றி சுவாரசியமான பல கேள்விகளை கல்லூரி முதல்வர் மற்றும் துணை முதல்வர் உட்பட பலர் எழுப்பினர். நிறைய மாணவர்கள் மிஷனின் சிறு அறிமுகப் புத்தகங்களை வாங்கி கொண்டதோடல்லாமல், பயிற்சியை தொடங்கவும் மிக்க ஆர்வம் காட்டினார்கள்.

## நெல்லூர், ஆந்திரப் பிரதேசம்

செப்டம்பர் மாதம் 21ஆம் தேதி அன்று, உலக அமைதி தினத்தை முன்னிட்டு நெல்லூர் நாராயணா பார்மசி கல்லூரியை சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகிகளுக்கு "நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி" மற்றும் "தியானத்தின் முக்கியம்" ஆகிய தலைப்புகளில் ஒரு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. மனித பண்புகள் பற்றி பேசிய சகோதரி உமா கங்காதர், குடும்பம் மற்றும் சமுதாயத்திடம் காட்ட வேண்டிய பாசம், அன்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பற்றி எடுத்துரைத்தார். சகோதரர் கங்கா பிரசாத், தியான பயிற்சி எப்படி மன ஒருமைப்பாட்டை அதிகரிக்க செய்கிறது என்றும், மனித ஆன்மீக சக்தியை விழிப்படையச் செய்கிறது என்றும் விளக்கினார். நிகழ்ச்சி முடிவில், சகோதரர் வீரபத்ர ராவ், கல்லூரி முதல்வர் சக்கா கோபிநாத், ஆகியோர் நற்பண்புகளைப் பற்றியும், அமைதியான மனதை பெற தியானம் எவ்வாறு உதவியாக இருக்கிறது என்பதைப் பற்றியும் பேசினர். இந்த நிகழ்ச்சி மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

## புச்சிரெட்டிபாலெம், நெல்லூர், ஆந்திரப் பிரதேசம்

கடந்த செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி அன்று வரவேற்புக்கூட்டம் மற்றும் அப்யாசிகளுக்கான முழு தின நிகழ்ச்சி நடத்தப்பட்டது. புச்சிரெட்டிபாலெம், சித்திபுரம் மையங்களை சேர்ந்த அப்யாசிகள் சுமார் 96 பேர் கலந்து கொண்டனர். 55 பேர் கலந்து கொண்ட வரவேற்புக்கூட்டம், காலை சத்சங்கம் முடிந்தவுடன் ஆரம்பித்து மதிய உணவு நேரம் வரை நீடித்தது. "மதமும் ஆன்மீகமும்", "ஆன்மீகத்தின் அவசியம்", "குருவின் அவசியம்" என்ற தலைப்புகளில் பேச்சுக்களை தொடர்ந்து கேள்வி பதில் நேரமும் நடைபெற்றது. மதிய இடைவேளைக்குப் பின்னர், பயிற்சி செய்துவரும் அப்யாசிகளுக்காக 10 நியமங்களின் முக்கியத்துவமும், சாதனாவின் அடிப்படை அம்சங்களும் கலந்துரையாடப்பட்டன.

## காம்காவ், புல்தானா மாவட்டம், மஹாராஷ்டிரா

இங்கு சகஜ மார்க்கப் பயிற்சி, சில ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டாலும் பெரிய அளவில் தெரியப் படாமல் இருந்து வந்தது. இங்குள்ள சில அப்யாசிகளுக்கு, மையத்தை வளர செய்ய வேண்டும் என்ற உள்தூண்டுதலினால், தங்களின் பயிற்சியை தீவிரப்படுத்தவும், எல்லோருடனும் சேர்ந்து பணியாற்றவும், மாஸ்டரிடம் அதற்கான பிரார்த்தனையில் ஈடுபட்டு வந்தனர். குறுகிய காலத்திற்குள், அவர்கள் சென்ற இடங்களில் அணுகிய மக்கள், தியானத்தைப் பற்றியும், நவீன வாழ்க்கை முறையில் அதன் அவசியத்தை பற்றியும், சகஜ மார்க்கத்தை பற்றி அறியவும் மிக்க ஆர்வம் காட்டினர். இதனால், அருகிலுள்ள மையத்திலிருந்த ஒரு ப்ரிசெப்டர் உதவியுடன், குறுகிய காலமான ஒன்றரை நாட்களுக்குள் 5 வரவேற்புக்கூட்டங்கள், - இரண்டு இஞ்சினியரிங் கல்லூரி ஆசிரியர்களுக்காகவும், ஒன்று கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்காகவும்,ஒன்று ஹிந்துஸ்தான் நிறுவன அதிகாரிகளுக்காகவும், ஒன்று கெமிஸ்டு ஹாலிலும் நடத்தப் பட்டன. இதில் கலந்து கொண்டோரின் உற்சாகம், அங்கிருந்த பிரிசெப்டரை அணுகி முதல் சிட்டிங்குகள் பெற நேரம் வாங்கியதிலிருந்து தெளிவாக தெரிந்தது.





## அரூர் ஆசிரமம், தமிழ்நாடு

# ஒளிமையம்





அரூர், தமிழ்நாட்டின், தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரம். அது மாநில நெடுஞ்சாலைகள் மூலம் சேலம், தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை போன்ற பெருநகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. பத்து கிலோமீட்டருக்கப்பால் பழைய மொரப்பூர் இரயில் நிலையம் அமைந்துள்ளது.

மையத்தின் தோற்றம் செப்டம்பர் 25, 1995ல் வாசவி மஹாலில், சகோ. V.K.சோமகுமார் அவர்களால் நடத்தப்பட்ட அறிமுக நாள் நிகழ்ச்சியால் அமைந்தது. 150 நபர்கள் கலந்து கொண்டதில், 15 நபர்களுக்கு அன்றே அறிமுக தியானம் கொடுக்கப்பட்டது. பிரிபெக்டுகள் திருப்பூர், சங்ககிரி மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களிலிருந்து வந்து, விருப்பமுள்ளவர்களுக்கு சிட்டிங் கொடுத்தனர். மையம், அக்டோபர் 1995முதல் செயல்படத் தொடங்கியது.



அரூர் ஆசிரமம், அரூரிலிருந்து கிட்டதட்ட ஐந்து கிலோமீட்டர் தொலைவில் திருப்பத்தூர் பிரதான சாலையில் அமைந்துள்ளது. ஆசிரமத்திற்கு நிலம் தேடும் பணி 1998ல் தொடங்கி, சோரியாம்பட்டி என்னுமிடத்தில் 5 ஏக்கர் பரப்பில் வாங்கப்பட்டு ஏப்ரல் 19,2000 அன்று பதிவு செய்யப்பட்டது.

மாஸ்டர், அரூர் ஆசிரமத்தைப் பார்வையிட்டு, பிப்ரவரி 17,2001ல் தியானக்கூடத்தை திறந்து வைத்து, இரண்டு நாட்கள் தங்கினார். 3000க்கும் மேற்பட்ட அப்யாசிகள் மற்றும் 500 ஆன்மீக நாடுநர்கள் வந்திருந்தனர். மாஸ்டர் தன் உரையில் ஒளிமையம் பற்றிய தன் கருத்தை "இது ஒளிமையமாக விளங்க வேண்டும், பயன்படுத்தப்படாத கோவிலைப் போன்று இருள்மையமாக மாறக்கூடாது. ஒளி எப்போது வரும்? நீங்கள் தீக்குச்சி எடுத்து விளக்கிலுள்ள திரியை ஏற்றும் போது மட்டுமே அது ஒளி, இல்லையெனில் அது இருள் மட்டுமே. ஆகவே நாம் வந்து ஒளியை உருவாக்க வேண்டும். ஒளி தானாகவே வராது. நாம் இங்கு வரும்போது தூய்மையான இதயத்துடன் வரவேண்டும். நாம் தூய்மையான இதயத்தைக் கொண்டு வந்தால் ஒளி தானாகவே பிரகாசிக்கிறது. அது கதிராக மாறுகிறது" என்று விளக்கிக் கூறினார்.







ஆசிரமத்தில், சூழலுக்கு அமைதி சேர்க்கும் பல மரங்கள் கொண்ட ஒரு அழகான தோட்டம் உள்ளது. தியான மண்டபம் 1000 சதுர அடி பரப்பு கொண்டது. இதற்கு கல்நார் தகடு வேய்ந்த கூரை உள்ளது. இதன் கட்டடப்பணி டிசம்பர் 2000இல் மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டது. இது தவிர, 864 சதுர அடி உள்ள, போதுமான அளவிலான கழிப்பறைகள், குளிப்பறைகள், கொண்ட தங்குமிடமும் உள்ளது. மாஸ்டரின் குடிலுடன், ஆசிரமத்தில் விசாலமான சமையலறை மற்றும் குளிர்ச்சியான வைக்கோல் வேய்ந்த கூரையுடன் கூடிய உணவுக் கூடமும் உள்ளது.

மாஸ்டர் ஆகஸ்ட் 16,2007 ல், இரண்டாவது முறையாக இந்த ஆசிரமத்திற்கு வருகை தந்து சத்சங்கம் நடத்தினார். மாஸ்டர் அரூர் ஆசிரமத்தில் ஒரு நிரந்தர தியான மண்டபம் கட்டுவதற்கு அனுமதி அளித்து உள்ளார்.

ஆசிரமத்தின் அருகில் உள்ள பகுதியில், 7 ஏக்கர் பரப்பளவில், ஸ்ரீ சாரிஜி குடியிருப்பு, அமைக்கப்பட்டது. அப்யாசிகளின் குடியிருப்புக்காக 90 இடங்கள் மாஸ்டரால் ஒதுக்கப்பட்டன. குடியிருப்பிற்கு நீர் வழங்க, 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலைத் தொட்டி கட்டப்பட்டது.

மாஸ்டரின் வருகைக்குப் பிறகு, ஊத்தங்குடி, சிங்காரப்பேட்டை, கம்பைநல்லூர், பொம்மிடி, பாபிரெட்டிப்பட்டி, மொரப்பூர் கொட்டப்பட்டி ஆகிய இடங்களில் துணை மையங்கள் அமைக்கப்பட்டன. அரூர், அதன் துணை மையங்கள் அனைத்திலும், ஏறக்குறைய 400 அப்யாசிகள் சகஜ மார்க்கப் பயிற்சி பெறுகிறார்கள். மேலும் சத்சங்கம் தவிர, மையத்தில் மாஸ்டரின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள், பிரிபெக்டுக்களின் கூட்டங்கள், மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியவை நடைபெறுகின்றன.

# அறிவிப்புகள்

## புதிய நியமனங்கள்

டாக்டர் சத்யா N. மண்டல்
மண்டலப் பொறுப்பாளர், தில்லி(NCR)பகுதி

உபேந்திர பால் தாவன் IRS (பணிஓய்வு பெற்றவர்)
இயக்குனர், க்ரெஸ்ட், கரக்பூர்

சகோதரி ரூபாலி கர்க்
துணை இயக்குனர், க்ரெஸ்ட், கரக்பூர்

C.S. ராமச்சந்திர மூர்த்தி
பராமரிப்பு மேலாளர், க்ரெஸ்ட், கரக்பூர்

ஜக்தீஷ் சரண் குப்தா
மேலாளர், லக்னௌ ஆசிரமம்.

உல்லாஸ் ராவ் கும்ப்ளே
மையப்பொறுப்பாளர், ஹைதரபாத் மையம்

ஷ்யாம்ஜி மெஹ்ரோத்ரா
மையப்பொறுப்பாளர், லக்னௌ மையம்




## உலகத் தலைமைச் செயலகத்தில் ஆவணக் காப்பகங்கள், சென்னை

நம் மிஷனின் வரலாற்றைப் பாதுகாக்க, உலகத் தலைமைச் செயலகம், மணப்பாக்கத்தில் உள்ள ஆவணக் காப்பகக் குழு, வரலாற்று முக்கியத்துவம் கொண்ட மிஷனின் கலைப்பொருட்கள் பலவற்றைச் சேகரித்துப் பாதுகாக்கிறது. அவ்விதப் பொருட்கள் (உதாரணமாக, புகைப்படங்கள், ஆடியோ, வீடியோ எந்த வடிவத்திலும், பழைய புத்தகங்கள், மாஸ்டர்களால் பயன்படுத்தப்பட்ட எந்தப் பொருளும்) உங்களிடம் இருந்தால், அவற்றைக் காப்பகத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துப் பின்வரும் தலைமுறையினருக்காகப் பாதுகாக்க உதவுவது குறித்து தயவு செய்து சிந்திக்கக் கோருகிறோம். காப்பகக் குழுவை, whq.archives@srcm.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.